2009 பிப்ரவரி 20]

முற்பகல் 9-35

32—

அலுவலகக் கட்டடம்

***61761—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அரசு போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகக் கட்டடத்தை பொன்னேரிக் கரையில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம், பொன்னேரிக் கரையில் தலைமை அலுவலகம் கட்டுவதற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் நின்றுகொண்டு கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

திருமதி கமலாம்பாள், நீங்கள் துணைக் கேள்வி கேட்கவில்லை என்றால், அடுத்த கேள்விக்குப் போய்விடுவேன். (குறுக்கீடுகள்) Supplementary question யாராவது கேட்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இந்தக் கேள்வி பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

[2009 பிப்ரவரி 20

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவையிலிருந்து வெளியேறினர்.)

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

34—

தொழிற்பேட்டை.

*18715—திரு. ப. டில்லி பாபு:

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நொச்சிப்பட்டி ஊராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட சிட்கோ தொழிற்பேட்டையைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நொச்சிப்பட்டி ஊராட்சியில் சிட்கோ தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்ட 5 தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்படை செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடுகள்) இத்தொழில் நிறுவனங்கள் தற்பொழுது சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.